கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2004/2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)

# HC 1101 இந்து நாகரிகம்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

## பகுதி - I

01. சுருக்கமான விளக்கம் தருக.

(i) வைணவ சமயத்தின் ஐந்து தூண்கள் எனக் கருதப்படுபவை எவை?

(ii) சிவகாமங்களின் காலம் பற்றிக் கருத்துத் தெரிவித்த மேலை நாட்டறிஞர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) "நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்" என்ற பொருள்பட அமைந்த பகவத்கீதையின் வழிமொழி சுலோகத்தைத் தமிழில் எழுதுக.

(iv) பரஜா சுகே சுகம் ராஜ்ஞ ப்ரஜானாம் : சஹிதே ஹிதம்
நாத்மப்ரியம் ஹிதம் ராஜ்ஞ ப்ரஜானாம் துப்ரியம் ஹிதம்" –
விளக்கம் தருக.

(v) வைணவனுக்குரிய ஐந்து சம்ஸ்காரங்கள் எவை?

(vi) பிற்கால விஞ்ஞான சிந்தனைகளுக்கு புராணங்கள் முன்னோடியாக அமைந்தன என்பதற்கு ஆதாரமாக அமைந்த மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

(vii) இராமாயணத்தினூடாக நீர் பெற்றுக்கொண்ட சமூக விழுமியங்கள் நான்கினைப் பட்டியல்படுத்துக.

(viii) நாட்டிய சாஸ்திரம் கூறும் தியான சுலோகத்தைத் தருக.

(ix) அர்த்தசாஸ்திரத்தின் உருவாக்கத்திற்கு முன்னோடியாக அமைந்த இந்து அரசியல் சாஸ்திரங்களாக கௌடில்யரால் குறிப்பிடப்பட்ட நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(x) "உலக இயக்கத்திற்கு மூலகாரணமாக ஏதோ ஒரு சக்தி உண்டு என்பதை இன்றைய விஞ்ஞானிகளும் ஒப்புக்கொள்கின்றனர்." - இக்கூற்றுக்கு அமைவாக அமைந்த இந்துமதச் சிந்தனைகள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.

## பகுதி - II

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

02. இந்துப் பண்பாட்டு மரபில் "பரத நாட்டிய சாஸ்திரம்" பெறுகின்ற முக்கியத்துவத்தை பின்வரும் தலைப்புக்களில் பரிசீலனை செய்க.
    (i) பரத நாட்டிய சாஸ்திரத்தின் காலம்
    (ii) அபிநயங்கள்
    (iii) அத்தியாயம் ஒன்று (01) முதல் அத்தியாயம் ஆறு (06) வரை கூறப்படும் முக்கிய விடயங்கள்

03. நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தை அடிப்படையாகக்கொண்டு பின் வருவனவற்றை விளக்குக.
    (i) ஆழ்வார்கள் அருளிய நூல்கள்
    (ii) வைணவ இலட்சணம்
    (iii) திருமந்திரச் சிறப்பு

04. இந்து நாகரிக வரலாற்றில் சிவாகமங்கள் பெற்றுள்ள முக்கியத்துவத்தை பின்வரும் தலைப்புக்களில் பரிசீலனை செய்க.
    (i) சிவாகமங்களின் தோற்றம் பற்றிய மரபுவழி ஐதீகங்கள்
    (ii) பொருள் மரபு
    (iii) தென்னாட்டில் சிவாகமங்களின் செல்வாக்கு

## பகுதி - III

**ஏதேனும் ஒரு வினாவிற்கு விடை தருக.**

05. இதிகாசங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து அது கூறும் வாழ்வியல் அம்சங்களை இன்றைய நடைமுறைவாழ்வியலுடன் பொருத்தி ஆராய்க.

06. "அரசன் மட்டுமே அரசு" என்ற சிந்தனையை அர்த்த சாஸ்திரம் ஏற்கவில்லை. இக்கூற்றின் பொருத்தப்பாட்டை சப்தாங்க கொள்கையைத் துணைக்கொண்டு ஆராய்க.

***********